[*2023 ஏப்ரல் 10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

செவிலியர் குடியிருப்பு

***7179—திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், செம்மிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய செவிலியர் குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் செம்மிபாளையம் பிரதான மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அது பிரதான மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக இருப்பதால், செவிலியர் குடியிருப்பின் அவசியம் கருதி, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று, கடந்த 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பத்தி எண் 35-ல் குறிப்பிட்டுள்ளபடி, தேசிய நல வாழ்வுக் குழும நிதியிலிருந்து ரூபாய் 22 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பீட்டில், செவிலியர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது பூச்சு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவில் அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.*

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்*

2023 ஏப்ரல் 10]

கழகத்தினுடைய மூன்றாவது அத்தியாயமாக கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று வருகை தந்திருக்கக்கூடிய அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செம்மிபாளையம் ஊராட்சியில் அமைந்திருக்கின்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் மக்கள் சேவைக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் 60 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகின்றது. இங்கு 5 செவிலியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் 24 மணி நேரமும் இந்தச் சுகாதார நிலையத்தில் தங்கி பணிபுரிய வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினந்தோறும் புறநோயாளிகளாக 200 பேர் வரை சிகிச்சை பெற்று வருகின்றார்கள். மாதம் 20 முதல் 25 பேருக்கு பிரசவம் பார்க்கப்படுகிறது. 20 படுக்கைகளில் சுழற்சி முறையில் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். கொரோனா காலகட்டத்தில் ஏற்பட்ட முதல் அலை, இரண்டாம் அலையின்போது, இங்கு தடுப்பூசி போடும் பணிகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, செம்மிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் செவிலியர்கள் அந்த வளாகத்திலேயே தங்கி பணிபுரிகின்ற வகையில் குடியிருப்பு வளாகத்தை விரைவிலே கட்டி, திறப்பு விழா செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கிய சுகாதார மையம் அது. அங்கே செவிலியருக்கான குடியிருப்பு வேண்டும் என்கின்ற அவசியத்தைக் கருதிதான், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அதுகுறித்து இடம்பெறச் செய்து, தற்போது கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக விரைவில் அது பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது.*

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்புகூட, நானும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலுள்ள தாயம்பாளையம் பகுதியில் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்ற சுகாதார நிலையக் கட்டடம் ஒன்றை திறந்து வைத்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளோம். அதுமட்டுமல்லாது, அதே தொகுதியில் தற்போது எலவந்தி பகுதியில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் ஒன்றும், வடமலைப்பாளையத்தில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் ஒன்றும், கேத்தனூர் பகுதியில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் ஒன்றும், கெங்கநாயக்கன்பாளையத்தில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் ஒன்றும், நாரணாபுரத்தில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் ஒன்றும் மற்றும் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்லடம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் ஒன்றும் என 6 மருத்துவமனைகளுக்கான கட்டடங்கள் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் மட்டும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சி நிறைந்த செய்தியினை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள்.

முற்பகல் 10–50

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 6 பகுதிகளில் சுகாதார நிலையங்களை அமைத்துக் கொடுக்கின்றார், மகிழ்ச்சி. பல்லடம் சட்டமன்றத் தொகுதி, பல்லடம் நகராட்சிப் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய அரசு மருத்துவமனையானது, 1908 ஆம் வருடம் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையாக ஆரம்பிக்கப்பட்டது. அது, 1956 ஆம் ஆண்டு முதல் அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகின்றது. இந்த மருத்துவமனையில் தற்சமயம் 91 படுக்கைகள் உள்ளன. அங்கு நாளொன்றுக்கு உள்நோயாளிகளாக 50 முதல் 60 நபர்களும், வெளிநோயாளிகளாக 500 முதல் 600 நபர்களும் சிகிச்சை பெற்று

2023 ஏப்ரல் 10]

வருகின்றார்கள். மேலும், இந்த மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலை 81-ல் அமைந்திருக்கின்றது. இந்த நெடுஞ்சாலையில் ஏற்படும் விபத்தில் காயமுற்றவர்களுக்கு முதலுதவி அளிப்பதற்கு கோவை அல்லது திருப்பூர் அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட வேண்டிய சூழலே உள்ளது. எனவே, இதனை கருத்தில்கொண்டு, இம்மருத்துவமனைக்கு 150 படுக்கை வசதிகள் செய்து தருவதோடு, இதை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சையளிக்க ஏதுவாக CT Scan வசதி, 24 மணி நேர விபத்து மற்றும் எலும்பு முறிவு பிரிவுகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும். சமீபத்தில் இடிந்து விழுந்த மருத்துவமனை கட்டடங்களைப் புதுப்பித்து தரவும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: ஏற்கெனவே இடிக்கப்பட்ட நிர்வாகப் பிரிவு கட்டடம், பிரசவப் பிரிவு கட்டடம், சமையற்கூடம் ஆகியவற்றை கட்டித் தரவும், மருத்துவமனைக்குத் தேவையான பணியாளர்களை நியமிக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் நகராட்சியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே ஒரு வட்டார மருத்துவமனை மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. மாமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, பல்வேறு சிறப்புகள் கொண்ட அந்த மருத்துவமனைக்கு எதிர்காலத்தில் தேவைப்படுகின்ற புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களைப் பெற்று, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நகராட்சிப் பகுதியில் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் கடந்த நிதிநிலை அறிக்கையின்போது தமிழ்நாட்டில் 25 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டன. அதில் ஒன்றை பல்லடம் தொகுதிக்குத்

தந்து, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணியும் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

சிற்றுந்துகள்

***14337—முனைவர் த. இனிகோ இருதயராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி, இருதயபுரம், எடத்தெரு மற்றும் எஸ்.எஸ். நகர் ஆகிய பகுதிகளுக்கு சிற்றுந்துகள் இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதிக்குட்பட்ட இருதயபுரம், எடத்தெரு மற்றும் எஸ்.எஸ். நகர் ஆகிய பகுதிகளுக்கு சிற்றுந்து இயக்குகின்ற திட்டம் அரசின் வசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட, மக்கள் அடர்த்தியாக வாழக்கூடிய பகுதிகளான இருதயபுரம், எடத்தெரு, எஸ்.எஸ். நகர் பகுதிகளில் கொரோனா காலத்திற்கு முன்பாக 52, 32A என்கின்ற அரசு பேருந்துகளும், 52A என்கின்ற தனியார் பேருந்தும் காலை 8–10, 8–20, நண்பகல் 12–00, மாலை 4–00, 4–30 என்ற அளவிலே குறிப்பாக பள்ளி மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்வதற்கு வசதியாக இயக்கப்பட்டன. தற்போது அவை நிறுத்தப்பட்டுள்ளன. அதனை மீண்டும் இயக்க வேண்டுமென்ற கோரிக்கை நாளுக்குநாள் வலுத்து வருகிறது. எனவே, இதனை மீண்டும் இயக்க அரசு முன்வர வேண்டுமென்று தங்களின்